[8th August 1960

SRI V. K. KOTHANDARAMAN : சார், மேஜை மீதுள்ள ஸ்டேட்மென்டில் 900 ரூபாய்க்கு ஒரு கிரௌண்ட் வாங்கி அதை 3,620 ரூபாய்க்கு விற்பனை செய்வதாகத் தெரிகிறது. இதைப் பார்க்கும்போது டெவலப்மென்ட் செய்யப்பட்டிருக்கிறது என்ற காரணத்தின்பேரில் ஒன்றுக்கு மூன்று மடங்கு விலைக்கு கொடுக்கப்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியானால் இது நியாயமான விலைதான் என்று சர்க்கார் கருதுகிறதா? இல்லையென்றால் இதைப்பற்றி ஏதாவது பரிசீலனை செய்யப்பட்டதா? பரிசீலனை செய்யவில்லை என்றால் பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATRAMAN: இது பற்றி தவறான ஒரு அபிப்பிராயம் பொதுவாக இருந்துகொண்டு வருகிறது. அதைத்தான் கனம் அங்கத்தினர் அவர்களும் திருப்பிச் சொல்லுகிறார்கள். ஸி.ஐ.டி. ஒரு இடத்தை வாங்கினால் அதில் மூன்றில் ஒரு மடங்கு ரோடு போடுவதற்கும், விளையாட்டு மைதானம் அமைப்பதற்கும், பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதற்கும் ஒதுக்க வேண்டும். அதோடு வாங்கப்படுகிற இடங்கள் எல்லாம் அன்-டெவலெப்ட் லான்டாக இருக்கிறது. அந்த இடங்களில் எல்லாம் ரோடு வசதி செய்து கொடுக்க வேண்டும், குழாய் வசதி செய்து கொடுக்கவேண்டும். சாக்கடை வசதி செய்து கொடுக்கவேண்டும். மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டும். இதற்கெல்லாம் செலவாகின்றது. இதில் கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்மென்டை பூராவும் கனம் அங்கத்தினர் அவர்கள் படித்திருந்தால் இதற்காக எவ்வளவு செலவு செய்யப்படுகிறது என்பதை பார்த்திருக்க முடியும். இவ்விதமான வசதிகள் செய்து கொடுப்பதினால் ஒவ்வொரு கிரௌண்ட்-க்கும் 1,763 ரூபாய் செலவாகிறது. இவ்விதமான எல்லா வசதிகளும் கொடுத்து ஃபுல்டெவலப்ட் லான்டாக கொடுப்பதினால்தான் இவ்வளவு அதிகமாகச் செலவாகிறது.

SRI A. A. RASHEED : Will the Government consider the desirability of reducing the supervision charges of City Improvement Trust?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸி.ஐ.டி. என்பது ஒரு தனி ஸ்தாபனம். அதற்கு ஏற்படும் செலவை அதுவாக சம்பாதித்துத்தான் சரிக்கட்டிக் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் சூப்பர்விஷன் சார்ஜ் போடப்பட்டு வாங்க வேண்டியிருக்கிறது.

Madras Port

* 29 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have recommended to the Union Government to declare the Madras Port as a free port?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

8th August 1960]

Sri A. A. RASHEED : Is the Hon. Minister aware of the fact that a port has been declared as a free port on the Western Coast of India? If so, will the Government request the Union Government to declare one port in the Eastern Coast as a free port?

The Hon. Sri P. KAKKAN : The Madras Port is under the administrative control of Union Government. So the State Government has nothing to do with it. So we did not recommend.

Reorganization of the Land Revenue Department

* 30 *Q.*—Sri S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நிலவரி இலாகாவின் வேலைகளைச் சீரமைப்பதற்காக கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறதா?

(ஆ) அப்படியானால், அதன் அறிக்கை சர்க்காருக்குக் கிடைத்து விட்டதா?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Grants to Private Colleges

* 21 *Q.*—Sri T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number, nature and type and amount of grants given by the Government to Private Colleges (Arts, Science and Professional) in the State;

(*b*) the nature of the grants by the University Grants Commission and the Government and the ratio between the two and the purposes for which they are given;

(*c*) the amount of grants given to each college in the State during the last three years, itemwar by our Government and by the University Grants Commission;

(*d*) whether the progress of each college by way of results produced are being watched by the Education Department and the Government; and

(*e*) if so, the percentage of results of the various colleges in our State in the Pre-University courses during the last three years and the steps taken by the Government to improve the backward colleges (from the point of view of results)?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A statement [a] is laid on the table of the House.

(*c*) The particulars are not available. The time and labour involved in collecting the particulars will not be commensurate with the purpose in view.

(*d*) No, Sir,

(*e*) Does not arise.

---

[a] Printed as Appendix III on page 128-129 infra.